**5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்**

**( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)**

**MCOP No.5209/2018**

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.1 |
| பெயர் | ஜீலியட் |
| த.பெயர் | முல்லை வேந்தன் |
| வயது | 59 |
| விலாசம் | கீழ்பாக்கம், சென்னை |
| தொழில் | நகர சுகாதார செவிலியர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 06.08.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன்.

முதல் தகவல் அறிக்கை மசாஆ1. விபத்து பதிவடே மசாஆ2. கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் வழங்கிய சான்று மசாஆ3. சிவ் சக்தி போன் அண்ட் ஜாயின்ட் மருத்துவமனையின் மருத்துவர் அறிக்கை மசாஆ4. குமரன் மருத்துவமனை விடுவிப்பு அறிக்கை மசாஆ5. மருத்துவ செலவு ரசீது மசாஆ6. சம்பள சான்றிதழ் மசாஆ7. விடுப்பு சான்று மசாஆ8. ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ9. இருசக்கர வாகனத்தின் வாகன பதிவு சான்று மசாஆ10. ஆட்டோ ரிக்சாவின் வாகன பதிவு சான்று மசாஆ11. ஆட்டோ ரிக்சாவின் காப்பீடு நகல் மசாஆ12. மனுதாரர் வங்கி புத்தகம் நகல் மசாஆ13. ஆதார் அட்டை நகல் மசாஆ14. நிரந்தர கணக்கு எண் அட்டை நகல் மசாஆ15. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**